பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 29 வியாழக்கிழமை 11.04.2024 கதிர் 156


2022 முதல் 2023 வரையில்

# இலங்கை மக்களின் போராட்டங்கள் சட்டவிரோதமாகவே ஒடுக்கப்பட்டன

## சர்வதேச மன்னிப்புச் சபை நேரடியாகக் குற்றச்சாட்டு

இலங்கையில் 2022 - 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் சட்டவிரோத ஆயுதங்களையும் உத்திகளையும் பயன்படுத்தி ஒடுக்கப்பட்டிருப்பதாக சர்வதேச மன்னிப்புச்சபை, சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் ஆர்ப்பாட்டங்களின்போது சட்டவிரோதமான முறையில் ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவது பற்றி 'எந்தவொரு ☞ 2



## இது ரகசியம் அல்ல!

அமெரிக்காவில் இருந்து பஸில் ராஜபக்ச நாடு திரும்பியது முதல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பொது ஜன பெரமுன எனப்படும் மொட்டுக் கட்சிக்கும் இடையிலான உறவு பதற்றமான நிலையை நோக்கி வேகமாக முன்னேறி வருகின்றது. பஸில் வந்ததுமே ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாகப் பொதுத் தேர்தலை முதலில் வைக்கலாம் என்றார். ஆனால் ரணில் அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. இதைத் தொடர்ந்து தனி வழியில் செல்வதை நோக்கி அந்தக் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன.

அதன் முதற்கட்டமாக தமது மொட்டுக் கட்சியில் இருந்துகொண்டே ரணிலுக்கு ஆதரவாகவும் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை ஆதரிப்பதாகவும் பொது வெளியில் கருத்துத் தெரிவிக்கும் அமைச்சர்களைக் கட்டுப்படுத்துவது என்று முடீவு செய்யப்பட்டு அதற்கான அறிவிப்பு விடுக்கப்பட்டது. அத்தோடு அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மொட்டுக்கட்சி ரணிலை ஆதிரிக்காது, தனி வேட்பாளரை நிறுத்தும் ☞ 2

## சு.கவை ரணிலோடு இணைக்க முயற்சி

### உதய கம்மன்பில குற்றச்சாட்டு

சிறீ லங்கா சுதந்திரக் கட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவோடு சேர்ப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கட்சியின் தலைவர் இல்லாமல் சுதந்திர கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தை கூட்ட முடியாது. கட்சியின் செயற்குழு மற்றும் நிறைவேற்று சபை ஊடாகவே தலைவரை நியமிக்க வேண்டும். தலைவராகப் பதவி வகித்த மைத்திரிபால சிறிசேனவுக்கு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தவுடன் கட்சி யாப்புக்கு ☞ 2

## கல்வி அமைச்சு இணையம் மீதான தாக்குதல் சூத்திரதாரி உள்நாட்டவரே

கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் மீதான சைபர் தாக்குதல், உள்நாட்டு இணைய வலையமைப்பின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை கணினிதிீள்பதிலளித்தல் ஒன்றியத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சருக தமுனு பொல தெரிவித்தார்.

சைபர் தாக்குதலை மேற்கொண்டது யார் என்பது தொடர்பில் அடையாளம் காண்பதற்காக இணையசேவை வழங்குநர்களிடம் தகவல்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேற்படி, விடயம் தொடர்பான அனைத்து தகவல்களும் உள்ளடங்கிய அறிக்கையொன்று கல்வியமைச்சுக்கு நேற்று கையளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை சைபர் தாக்குதலுக்கு இலக்கான கல்வி அமைச்சின் இணையத்தளமானது தொடர்ந்தும் செயலிழந்த நிலையிலேயே காணப்படுவதோடு முதற்கட்ட ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வுப் பிரச்சினையில்

## பெருந்தோட்ட தொழிற்சங்கங்கள் அனைத்தையும் தொழிலாளர் பக்கம் நிற்க அமைச்சர் ஜீவன் அழைப்பு

'பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு தொடர்பான சம்பள நிர்ணய சபையின் 2ஆவது கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதன்போது அனைத்துத் தொழிற்சங்கங்களும் தொழிலாளர் பக்கம் நின்று உரிய வகையில் தமது வாக்கைப் பயன்படுத்த வேண்டும் - என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சில் நேற்று ☞ 2

## இணங்கிப் போகும் வரைதான் ரணிலோடு பயணம் தொடரும்

### முடியாவிடின் விலகிவிடுவோம் என்கிறார் ராஜபக்ச

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கமாகச் செயற்படும் வரை இணைந்து பணிப்போம். முடியாவிடின் விலகி விடுவோம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் ☞ 8

## கொழும்பு துறைமுகம் ஊடாக தென்னிந்திய ஏற்றுமதி இறக்குமதியை முன்னெடுக்க பேச்சு

### ஜனாதிபதி ஏற்கனவே தொடங்கியுள்ளார் என்கிறார் சாகல

கொழும்புத் துறைமுகத்தின் ஊடாகத் தென்னிந்தியாவின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை முன்னெடுப்பது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு நடத்தி நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளை ஜனாதிபதி ஏற்கனவே ஆரம்பித்துள்ளார் என்று தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு முகத்துவாரத்தில் நேற்று நடைபெற்ற ரன்திய உயன வீட்டுத் தொகுதியை பயனாளிகளுக்குக் கையளிக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நெருக்கடியிலிருந்து நாடு மீண்டு சுமூகமான நிலைக்கு வந்துள்ளது. நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஜனாதிபதி ஏற்படுத்தினார். அவருக்கு இருக்கின்ற சர்வதேச தொடர்புகளே அதற்கு காரணமாகும்.

மேலும், மற்றொரு பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் இருக்கும் வகையிலான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இலங்கையின் பொருளாதாரம் மீது நம்பிக்கை இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் இன்று நம்பிக்கையுடன் நாட்டிற்கு வருகிறார்கள். அத்துடன், இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதத்தை அதிகரிப்பதற்கான திட்டங்களை ஜனாதிபதி ஏற்கனவே தயாரித்துள்ளார். அதன் மூலம் வருமானத்தைப் பலப்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்ப ☞ 2

## குற்ற அதிகரிப்புக்குக் காரணம் சமயக் கல்வியை கைவிட்டதே

### சாசன பாதுகாப்புச் சபை ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டு

சமயக் கல்வி பெருமளவில் கைவிடப்பட்டிருப்பதாகவும், அதனாலேயே சமூகத்தில் குற்றச் செயல்கள் அதிகரிப்பதாகவும் சுட்டிக்காட்டிய அகில இலங்கை சாசன பாதுகாப்புச் சபையின் பிரதிநிதிகள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

அகில இலங்கை சாசன பாதுகாப்புச் சபையின் பரிந்துரைகளை ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே சபையின் பிரதிநிதிகளால் ☞ 8

## அமெ. தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகலவுடன் தொலைபேசியில் பேச்சு

இலங்கையின் இறைமை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அமெரிக்காவின் முழுமையான ஆதரவு கிடைக்குமென ஐக்கிய அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சலிவன் உறுதியளித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்கவுடன் நேற்று நடந்த தொலைபேசிக் கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல முக்கிய விடயங்கள் இங்கு கலந்துரையா ☞ 2

## புத்தாண்டு சுபவேளை குறிப்புப் பத்திரம் ஜனாதிபதியிடம் கையளிப்பு

தமிழ் சிங்களப் புத்தாண்டுக்கான சுபவேளை குறிப்புப்பத்திரம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் சம்பிரதாய முறைப்படி நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அரச சுபநேர கணிப்புக் குழுவினால் தயாரிக்கப்பட்ட சுபவேளை குறிப்புப் பத்திரமே இவ்வாறு ஜனாதிப ☞ 2

## ஏப். 15 பொது விடுமுறை

ஏப்ரல் 15 ஆம் திகதி பொது விடுமுறையாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரதீப் யசரத்ன தெரிவித்துள்ளா.

புத்தாண்டுக்கான தேசிய எண்ணெய் அபிஷேகம் நடைபெறவுள்ள நிலையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதற்கு அமைவாக, பொதுச்சேவைத் துறைகள் குறித்த பிரகடனத்தினைப் பின்பற்றும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மைத்திரியின் 'தாய்' பயணம் குறித்து விசாரிக்க வலியுறுத்தி முறைப்பாடு

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தாய்லாந்துக்கான பயணம் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன குற்றப்புலனாய்வுப் பிரிவிடத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட 9 பேர் அடங்கிய குழுவினர் தாய்லாந்துக்கான பயணித்துள்ளனர். ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

என்கிற செய்தியும் தொடர்ந்து வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதன்தொடர்ச்சியாகஜனாதிபதித் தேர்தல் மற்றும் வேட்பாளர் தொடர்பில் பொதுவெளியில் கருத்துக்களைத் தெரிவிக்கும் பெரமுன உறுப்பினர்கள் மீது கட்சியாப்புக்கு அமைய கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு பொது ஜன பெரமுன தீர்மானித்துள்ளது.

கட்சியின் அரசியல் சபைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை இரவு, பத்தரமுல்லவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெற்றபோது ஜனாதிபதித் தேர்தல் குறித்தும் ரணிலுக்கு ஆதரவாகச் செயற்படும் தமது கட்சி உறுப்பினர்கள் தொடர்பிலும் தீவிரமாக ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் நிறுவுனர் பஸில் ராஜபக்ச, தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.

கூட்டத்தில் அடுத்த மேதின நிகழ்வைப் பெரியளவில் மேற்கொண்டுதமக்குமக்கள்ஆதரவு இன்னமும்இருக்கின்றதுஎன்பதைப் பறைசாற்றுவது தொடர்பிலும் தீவிர கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் மாவட்ட ரீதியில் மக்கள் சந்திப்புக்களை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சிக் கிளைகளை சீரமைப்பதுடன் புதிய மாவட்ட அமைப்பாளரகள் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தல் மற்றும் வேட்பாளர் விடயத்தில் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச பொதுவெளியில் தமது கட்சி அங்கத்தவர்கள் கருத்துக்களை வெளியிடுவதைதவிர்க்கவேண்டும் என்ற அறிவிப்பை விடுத்துள்ள நிலையிலும் தொடர்ந்து கருத்துத் தெரிவித்து வருபவர்கள் மீது கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும்என்று கூட்டத்தில் பலரும் உரத்து வலியுறுத்தினர்.

அத்தகையவர்கள் மீது, குறிப்பாக அமைச்சர் பிரசன்னரணதுங்க மீது கட்சியின் ஒழுக்காற்றுக்குழு யாப்பு விதிகளுக்கமைவாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் கட்சியிலிருந்து வெளியேறி வேறு தரப்புக்களுடன் இணைந்து செயற்படுபவர்கள்மீதும்உரியநடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆக மொத்தத்தில் ரணில் - ராஜபக்சக்கள் தேனிநலவுக் காலம் ஒரு முடிவை நோக்கி விரைந்து முன்னேறுவது தெளிவாகத் தெரிகிறது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ப்பாட்டத்தையும்ஒடுக்கத்தயார்' எனும் மகுடத்திலான விரிவான அறிக்கையொன்று சர்வதேச மன்னிப்புச்சபையினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

2022 மார்ச் - 2023 ஜூன் வரையான 16 மாதகாலப் பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற 30 ஆர்ப்பாட்டங்களின்போது, அவற்றை ஒடுக்குவதற்காகக் கையாளப்பட்ட உத்திகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட படைபலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரந்துபட்ட ஆய்வின் அடிப்படையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை மேற்படி அறிக்கையைத் தயாரித்துள்ளது.

இந்தஆய்வானதுஇலங்கையின் சட்ட அமுலாக்க கட்டமைப்புக்களால் நிகழ்த்தப்படும் சட்டவிரோத கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகத்தினதும், முறையற்ற தடியடி பயன்பாட்டினதும் ஒரு தொடர்போக்கைக் காண்பிப்பதாக அறிக்கை குறிப்பிடுகின்றது. அதில் காணப்படும் முக்கிய விடயங்கள் வருமாறு:

அரைவாசிக்கும் மேற்பட்ட போராட்டங்களை ஆராய்ந்ததில் குறைந்தபட்சம் 17 போராட்டங்களில் சட்ட அமுலாக்க அதிகாரிகள் சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களைப் பின்பற்றுவதற்குத் தவறியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இந்தப் போக்கு இலங்கையில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையை மட்டுப்படுத்துகின்றது.

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையானது பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் உள்ளடங்கலாக பரந்துபட்ட அடிப்படையிலான பிற உரிமைகளை அங்கீகரிப்பதற்கும், உணர்ந்துகொள்வதற்கும் பயன்படக்கூடிய பெறுமதிமிக்கதோர் கருவியாகும்.

இது ஒடுக்கப்பட்ட நிலையிலுள்ள தனிநபர்களுக்கும், குழுக்களுக்கும் மிக அவசியமானதாகும். எனவே அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைக்கு மதிப்பளித்து, அதனை உறுதிப்படுத்துவதற்கு தவறுவது அடக்குமுறையின் குறியீடாகும். அதேபோன்று அவ்வுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் சார்ந்தகடப்பாடு பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு கட்டமைப்புக்களுக்கு உண்டு.

2022 பெப்ரவரி தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியை அடுத்து, அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோர் பதவி விலகவேண்டும் எனவும், பொருளாதார நெருக்கடி, ஊழல் மற்றும் மனித உரிமை மீறல்கள் என்பன தொடர்பில் அவர்கள் பொறுப்புக்கூறவேண்டும் எனவும் வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் பொதுமக்களால் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றுக்கு எதிராக பாதுகாப்புத் தரப்பினர் ஒடுக்குமுறைகளையும், வன்முறைகளையும் பிரயோகித்தனர். குறிப்பாக ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராகக் கொடிய மற்றும் வலுக்குறைந்த ஆயுதங்கள் சட்டவிரோதமான முறையில் பயன்படுத்தப்பட்டன. அடுத்தடுத்த மாதங்களில் 'அரகலய' என அழைக்கப்படும் பெருமளவிலான ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு இவை வழிவகுத்தன.

இருப்பினும் சட்ட அமுலாக்க அதிகாரிகள் போராட்டங்களுக்கு எதிரான சட்டவிரோத பலத்தைப் பிரயோகிப்பது ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னரும் தொடர்ந்தது.

நாட்டின்வட, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களால் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அமைதியான முறையில் இப்போராட்டங்களை முன்னெடுத்தோருக்கு எதிராக பாதுகாப்புப்படையினர் மற்றும் உளவுத்துறை அமைப்புக்கள் தொடர்கண்காணிப்பு, அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் இடையூறு விளைவித்தல் ஆகியவற்றை மேற்கொண்டன.

2022, 2023ஆம்ஆண்டுகளில் அமைதிப் போராட்டக்காரரர்கள் கலைந்து செல்வதற்கு போதிய கால அவகாசத்தை வழங்காமலும், அவர்களுக்கு காயம் ஏற்படக்கூடிய அபாயத்தைக்குறைப்பதற்குஎவ்வித முயற்சியையும்மேற்கொள்ளாமலும், சர்வதேச நியமங்களை மீறி போராட்டக்காரர்களுக்குப் பின்னாலும், பாடசாலைகள், வீதிகள் மற்றும் பிற திறந்தவெளி பகுதிகளுக்கு அருகாமையிலும் பொலிஸார் உள்ளிட்டப் பாதுகாப்புத் தரப்பினரால் கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டமையை நாம் ஆவணப்படுத்தியுள்ளோம்.

இவ்வாறானதொரு பின்னணியில் அமைதியான ஒன்றுகூடல்களை எளிதாக்குவதை அடிப்படையாகக் கொண்ட ஒட்டுமொத்த அணுகுமுறையைப் பின்பற்றுவதுடன் அனைத்து ஆர்ப்பாட்டக்காரர்களினதும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமையை உறுதிசெய்தல், ஆர்ப்பாட்டங்களைக் கையாளும் செயன்முறை சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு ஏற்புடையதாக அமைவதை உறுதிசெய்தல், ஆர்ப்பாட்டங்களின்போது சட்டவிரோத படைப்பலம் பிரயோகிக்கப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளல், அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட அதிகாரிகளைசட்டத்தின்முன் நிறுத்துதல் ஆகியவற்றுக்குரிய நடவடிக்கைகளை ஆளும் தரப்பு முன்னெடுக்கவேண்டும்.

கடந்தகாலங்களில்ஆர்ப்பாட்டங்களின்போது சட்டவிரோத படைப்பலம் பிரயோகிக்கப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதுடன், அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட அதிகாரிகளை சட்டத்தின்முன் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆளும் தரப்பிடம் வலியுறுததுகின்றோம் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுத்த முடியும்.

2019 ஆம் ஆண்டில், 25 லட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர். அந்த இலக்கை மீண்டும் அடைய முடியும். இத்தொகையை 25 இலட்சமாக அதிகரிக்கவும் வருடாந்த சுற்றுலாப்பயணிகளின்வருகையை ஐம்பது இலட்சமாக அதிகரிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்போது நாளாந்தம் 500 டொலர்கள் வரையில் செலவு செய்யக்கூடிய சுற்றுலா பயணிகளை அழைத்து வரவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கொழும்புத் துறைமுகத்தின் ஊடாகத் தென்னிந்தியாவின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளை முன்னெடுப்பது தொடர்பில் இந்தியாவுடன் பேச்சு நடத்தி நாட்டின் வருமானத்தை அதிகரிப்பதற்கான முயற்சிகளை ஜனாதிபதி ஏற்கனவே ஆரம்பித்துள்ளார்.

விவசாயத்தைநவீனமயப்படுத்தி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் முதலீடுகளை அதிகரிக்கவும், அதிக வருமானத்தை அடைவதற்குமான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

உறுமய திட்டத்தின் கீழ் காணிகளை காணி உறுதிகள் வழங்கப்படுகின்றன. மக்களுக்கு வீடு வழங்கும் வேலைத்திட்டமும் இன்றுநடைமுறைப்படுத்தப்படுகிறது. இவை அனைத்தும் கடந்த இரண்டு வருடங்களில் செய்யப்பட்டுள்ளன. நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுபட்டு, இரண்டு வருடங்களில் புதிய பொருளாதாரத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. எனவே ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலமே இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் - எனறார்.

## மைத்திரியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செவ்வாய்க்கிழமை அதிகாலை அவர்கள் நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இந்நிலையிலேயே இந்தப் பயணம்சந்தேகத்தைஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின்நாடாளுமன்றஉறுப்பினர் காவிந்த ஜயவர்தன நேற்று முறைப்பாடு செய்தார்.

அத்துடன், அந்த முறைப்பாடு தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அவர் நேற்று வருகை தந்திருந்தார். அதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து வெளியிடப்பட்ட நிலையில் தற்போது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாய்லாந்துக்குப் பயணமாகியுள்ளமை சந்தேகத்தை எழுப்புகின்றது. அது குறித்து எனது நிலைப்பாட்டை நான் குற்றப்புலனாய்வுப்பிரிவினரிடத்தில் தெரிவித்துள்ளேன். அத்துடன் அவர் தாக்குதல் குறித்த தகவல்களை வெளியில் கூறிவிட்டு பொறுப்புக்கூறுவதிலிருந்து விலகி நிற்கப் பார்க்கின்றார். ஆகவே அதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்'' என்றார்.

## அமெ. தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டப்பட்டதுடன். விரைவான பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கான இலங்கையின் தொடர்ச்சியான முயற்சிகளைப் பாராட்டினார். அத்தோடு, சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட பொது நிதி, பணம் மற்றும் நிர்வாகம் ஆகிய துறைகளில் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் பல்வேறு துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக இலங்கையுடன் அர்ப்பணிப்பாக பணியாற்றுவதாகவும் சலிவன் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடல் ஐக்கிய அமெரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான உறவுகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதோடு, இந்து-பசுபிக் வலயத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்தை மேம்படுத்துவதற்கான இருநாடுகளினதும் அர்ப்பணிப்பையும் வலியுறுத்துகிறது.

## புத்தாண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியிடம் கையளிக்கப்பட்டது.

புத்தசாசன, சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க சம்பிரதாய முறைப்படி ஜனாதிபதிக்கு வழங்கி வைத்தார்.

புத்தாண்டு பிறப்பு, புண்ணிய காலம், உணவு சமைத்தல், அடுப்பு பற்றவைத்தல், உணவு உண்ணல், தலைக்கு எண்ணெய் தேய்த்தல், புத்தாண்டில் வேலைக்குப் புறப்பட்டு செல்லுதல் உள்ளிட்ட சுப காரியங்களுக்கான சுப நேரங்கள் மேற்படி பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன உள்ளிட்ட பலர் இந்தநிகழ்வில்கலந்துகொண்டனர்.

## பெருந்தோட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களைச் சந்தித்தபோது இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பள நிர்ணயசபை இன்று (நேற்று) கூடியது. 10 தொழிற்சங்கங்களில் 9 தொழிற்சங்க பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். தோட்ட சேவையாளர் சங்க பிரதிநிதிகள் பங்கேற்கவில்லை. பெருந்தோட்டக் கம்பனிகளும் வரவில்லை.

ஏப்ரல் 10 சம்பள நிர்ணயசபைக் கூடும் என ஏப்ரல் முதலாம் திகதியே அறிவித்திருந்தோம். எனினும், தம்மால் வரமுடியாது என கம்பனிகாரர்கள் செவ்வாய்க்கிழமையே அறிவித்திருந்தனர்.

சம்பளஉயர்வுதொடர்பில்கடந்த ஓகஸ்ட் மாதம் முதலே பேச்சு நடத்தி வருகின்றோம். எனவே, உரிய கால அவகாசம் இல்லை என்பது உட்பட கம்பனிகள் கூறிவரும் காரணங்கள் ஏற்புடையானவை அல்ல.

கூட்டு ஒப்பந்த விவகாரத்தில் எவ்வித சட்டசிக்கலும் இல்லை என சட்டமா அதிபரிடமே நாம் ஆலோசனை பெற்றுவிட்டோம். ஆனால் சட்ட சிக்கல் எனக்கூறி கூட்டு ஒப்பந்தத்துக்கு வருவதற்கு கம்பனிகள் மறுக்கின்றன.

நாம் அடிப்படை சம்பளத்தையே அதிகரிக்குமாறு வலியுறுத்துகின்றோம். ஆனால் அடிப்படைசம்பளத்தைஅதிகரிக்காது கொடுப்பனவு என்ற அடிப்படையில் 33 சதவீத சம்பள அதிகரிப்பை வழங்குவதற்கு கம்பனிகள் யோசனை முன்வைத்துள்ளன. 33 சதவீத சம்பள உயர்வு நல்லது தானே, அதனைஏற்கலாம்அல்லவா என சிலர் கேட்கின்றனர். இது ஏற்புடையது அல்ல. அதனால்தான் நாம்நிராகரித்தோம். இதுவிடயத்தில் எவ்வித அரசியல் நோக்கமும் இல்லை.

சம்பள நிர்ணய சபையை இரண்டு தடவைகள் கூட்ட வேண்டும். உரிய காரணங்கள் கூறாமல் கம்பனிகள் இன்று வராததால்இன்றையகூட்டத்தையும் கருத்திற்கொள்ள வேண்டும் என தொழில்அமைச்சரிடம்கோரினேன். அந்த கோரிக்கையை அவர் ஏற்றுள்ளார். 2ஆவது கூட்டம் 24 ஆம் திகதி கூடும்.

இதன்போது சம்பள உயர்வு தொடர்பில் வாக்கெடுப்பு நடத்தப்படும். தொழிற்சங்கங்கள் காட்டிக்கொடுக்காமல் இருந்தால் தீர்வைப் பெறலாம். 24 ஆம் திகதி தோட்ட சேவையாளர்சங்கமும்பங்கேற்கும் என எதிர்பார்க்கின்றோம். பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அஞ்சாமல், தொழிலாளர்கள் பக்கம் நிற்குமாறுகேட்டுக்கொள்கின்றோம்.' என்றார்.

அதேவேளை, 1,700 ரூபா என்ற எமது சம்பள உயர்வு கோரிக்கை அரசியல் நோக்கம் கொண்டது அல்ல. தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் ஓரளவேனும் சமாளிக்க வேண்டுமெனில் அந்த கொடுப்பனவு அவசியம். அதேபோல நாட்சம்பள முறைமை நிலையான தீர்வு அல்ல. எனவே தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினைக்கு நிலையான தீர்வு பொறிமுறை அவசியம் என்றார்.

## சு.கவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முரணான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திர கட்சியின் தலைவரின் அழைப்புக்கு அமையவே கட்சியின் ஆலோசகர்கூட்டங்களில்பங்குப்பற்ற முடியும். ஆனால் தற்போது கட்சியின் ஆலோகரான சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் தலைமைத்துவத்தில் அரசியல் குழுக் கூட்டம் கூட்டப்பட்டு, தவறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

சிறீ லங்கா சுதந்திர கட்சியை ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுடன் ஒன்றிணைக்கும் செயற்பாடுகள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படுகின்றன. முன்னாள்ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தவறான தீர்மானங்களினால் கட்சி பலவீனமடைந்துள்ளது. ஒரு தரப்பினர் இதனைத்தமக்குச்சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

அரசியல் கட்சிகளை பிளவுப்படுத்தும் செயற்பாட்டை ஜனாதிபதி வெற்றிகரமாக முன்னெடுக்கிறார்

பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி தொடர்பில் சகல தரப்பினருடனும் பேச்சில் ஈடுபட்டுள்ளோம். மேதினத்துக்கு முன்னர் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவோம் - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# ஆளும் அதிகாரம் இல்லாமலேயே மக்களுக்குச் சேவையாற்றினோம்

## வாக்கைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்கிறார் சஜித்



நாட்டில் ரூபாய் மற்றும் டொலர் தட்டுப்பாடு நிலவும் இவ்வேளையில், இந்தப் பற்றாக்குறைக்கு யார் தீர்வை வழங்க முடியும் என்பதை நிரூபிக்க இதுவே சிறந்த சந்தர்ப்பமாகும். அதிகாரம் இல்லாமலும் மக்களுக்காகவும்நாட்டுக்காகவும்சேவையாற்றி திறமையை வெளிக்காட்டியுள்ளோம்.எனவே மக்கள் இது குறித்து நோக்கி வாக்கை சரியாக பயன்படுத்த முடியும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத் திட்டத்தின் கீழ், 146 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், புத்தளம், வென்னப்புவ, தங்கொடுவ, பொதுவடவன சிறீ ஜினரதன மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில், கல்லூரியின் நடனம்,வாத்தியம் மற்றும் அரங்கேற்றங்கள் குழுவினருக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்வதற்குத் தேவையான ஒரு இலட்சம் ரூபா நிதியையும் நன்கொடையாக வழங்கி வைத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

முறைமைமாற்றத்தைநோக்கியபயணத்தில் தேய்ந்து போன சம்பிரதாய அரசியல் கலாசாரத்தில் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்குவோம். சேறுபூசல்,வன்முறை மூலம் அதிகாரத்தைக் காட்டுவதை விட, அபிவிருத்திக்கான போட்டியாக பங்கேற்று சிறந்த அரசியல் நடவடிக்கையை மக்களுக்காக முன்னெடுக்கும் போக்கு குறித்து நோக்க வேண்டும். இதன் மூலம் சரியான அபிவிருத்தி பார்வை கொண்டவர் யார், சொல்வதைச் செய்யும் தலைவர் யார் என்பதை மக்களால் தெளிவாக கண்டறிய முடியும்.

தற்போதுள்ள கல்வி முறையை மாற்ற வேண்டும். யதார்த்தத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். சிங்களம் மட்டும் தமிழ் மட்டும் என போலியான தேசபற்றை முன்னிலைப்படுத்தி உணர்வுவயமாக செயற்படுவதால் 41 இலட்சம் பிள்ளைகள் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர். ஆங்கில மொழி கல்வியறிவை உயர் மட்டத்தில் பேணுவதே உலகளாவிய உண்மையாகும். இது குறித்து கூறும் போது சேறுபூசுகின்றனர். கேலி செய்கின்றனர்.

நான் யதார்த்தையே பேசுகிறேன். உலக போக்குக்கு ஏற்ற விதமாக எமது நாட்டில் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். ஆங்கிலமும் தகவல் தொழிநுட்ப துறைகள் முக்கிய பரப்பாகும்.

புதியன புகாமல் புத்தாக்கத்தை ஏற்படுத்த முடியாது. முற்போக்கு ரீதியாக கல்விக்கட்டமைப்பில் மாற்றம் நிகழ்ந்தே ஆக வேண்டும். இன்று தனியார் பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளுக்கு கிடைக்கும் கற்றல் வசதிகள் அரச பாடசாலைகளில் இல்லை. கல்வியில் நிலவும் ஏற்றத்தாழ்வுகள் களையப் பட வேண்டும் என்றார்.

# பிறைட் அமைப்பினரால் அதிதிகளுக்கு கௌரவம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பாலமுனை பிறைட் அமைப்பின் இப்தார் நிகழ்வு பாலமுனை தனியார் மண்டபத்தில் அதன் தலைவர் ஏ.எல்.எம்.அர்தாத் தலைமையில் நேற்று நடைபெற்றது

இந்நிகழ்வில் தேசியகாங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஜூம் ஆப்பள்ளி தலைவர் எம்.ஏ.அன்சார் மற்றும் முன்னாள் அட்டாளைசேனை பிரதேசசபை உறுப்பினர்கள், தொழிலதிபர்கள், எம்.ஏ.எம்.அபூபக்கர், கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ளைப்பலரும்கலந்துகொண்டனர்.

பிறைட் அமைப்பினரால் அதிதிகள் பொன்னாடை



முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார். சிறப்பு அதிதிகளாகஎம்.கே.இப்னுஅசார் பிறைட் அமைப்பின் ஆலோசகரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (ஏ.எஸ்.பி ) பாலமுனை போர்த்தியும் நினைவுச் சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன் பிறைட் அமைப்பின் புதிய 'ரீசேட்' அங்கத்தினர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# தனியொரு வேட்பாளரை களமிறக்கியே தீருவோம்

## பொது ஜன பெரமுன எம்.பி. சூளுரை

தனி வேட்பாளரைப் பொது ஜன பெரமுன கட்சி களமிறக்கியேதீரும்என்று பொதுஜனபெரமுனவின் பொருளாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின்தலைமையகத்தில்செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட பொது ஜன பெரமுனவில் உறுப்பினர்கள் எவரும் இல்லை என கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிடுவது அவரது தனிப்பட்ட நிலைப்பாடே தவிர கட்சியின் நிலைப்பாடல்ல.

கட்சிமட்டத்தில்உத்தியோகபூர்வதீர்மானம்ஒன்று எடுக்கப்படும் பட்சத்தில் தனிப்பட்ட கருத்துக்களைக் குறிப்பிடுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும். கட்சியின் உள்ளக மட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை அவர் விளங்கிக் கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்.

ஜனாதிபதிவேட்பாளரைகளமிறக்கும்இயலுமை எமக்கு உள்ளது. வேட்பாளரை அறிவிக்க காலம் உள்ளது.சிறந்ததை இறுதியில் அறிவிப்போம். வெற்றிப்பெறும் வேட்பாளரையே நாங்கள் களமிறக்குவோம் என்பதை பிரசன்ன ரணதுங்க நன்கு அறிவார்.


ஜனாதிபதிவேட்பாளர்விவகாரத்தில்அவசரமடைய வேண்டிய தேவை கிடையாது. தனித்த ஒரு வேட்பாளரை நாங்கள் களமிறக்குவோம்.

பொது ஜன பெரமுனவுக்குள் எவ்வித முரண்பாடுகளும் கிடையாது. வெளியில் எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள்கூட எம்முடன் இணக்கமாகவே செயற்படுகிறார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க கட்சி மட்டத்தில் தீர்மானிக்கப்படவில்லை. பொதுஜன பெரமுனவின் வேட்பாளரையேகளமிறக்குவோம். வெகுவிரைவில் எமது தீர்மானத்தை அறிவிப்போம் என்றார்.

# தப்பியோடிய படையினருக்கு சேவை நீக்க பொதுமன்னிப்பு

## ஏப்ரல் 2-0 முதல் ஒரு மாத காலத்திற்கு அறிவிப்பு



நீண்ட காலமாக முறையான விடுமுறையின்றி சேவையிலிருந்து விலகியிருந்த தரைப்படையினர் சட்டரீதியாகச்சேவையைவிட்டுவெளியேறுவதற்குப் பொதுமன்னிப்புகாலம்பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய முறையான விடுமுறையின்றி கடமைக்குசமூகமளிக்காத மற்றும்சட்டவிரோதமான முறையில் சேவையை விட்டு வெளியேறியுள்ள இலங்கைத் தரைப்படையின் அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு ஏப்ரல் 20 முதல் மே 20 வரை பொது மன்னிப்பு காலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல்2ஆம்திகதிக்கு முன்னர் முறையான விடுமுறையின்றி பணிக்குசமூகமளிக்காத அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களுக்கு இந்தப் பொது மன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த பொது மன்னிப்பு காலத்துக்கானஇறுதிதிகதி எக்காரணத்துக்காகவும் நீடிக்கப்பட மாட்டாது என தரைப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தரைப்படை அடையாள அட்டை, தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதி பத்திரம், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வரவு வைக்கப்பட்டுள்ள வங்கிப் புத்தகத்தின் நகல், கடைசியாகப் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளின் சம்பளப் பட்டியல் நகல் என்பவற்றை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அடக்குமுறையை ஆதாரப்படுத்தி வெளிப்படுத்திய மன்னிப்புச் சபை

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் மக்களாட்சி விரோதப் போக்கை அம்பலப்படுத்தியுள்ளது சர்தேச மன்னிப்புச் சபை.

இலங்கையில் 2022 – 2023 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்கள் சட்டவிரோத ஆயுதங்களையும்உத்திகளையும்பயன்படுத்திஒடுக்கப்பட்டிருப்பதாக மன்னிப்புச்சபை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தீவிரமாக ஆராயந்த பின்னர் சபை இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. இலங்கையில் ஆர்ப்பாட்டங்களின்போதுசட்டவிரோதமானமுறையில்ஆயுதங்கள் பயன்படுத்தப்படுவது பற்றி 'எந்தவொரு ஆர்ப்பாட்டத்தையும் ஒடுக்கத் தயார்' எனும் மகுடத்திலான விரிவான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

2022 மார்ச் – 2023 ஜூன் வரையான 16 மாதகாலப் பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற 30 ஆர்ப்பாட்டங்களின்போது, அவற்றை ஒடுக்குவதற்காகக் கையாளப்பட்ட உத்திகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட படைபலம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பரந்துபட்டஆய்வின்அடிப்படையிலேயேசர்வதேசமன்னிப்புச்சபை மேற்படி அறிக்கையைத் தயாரித்துள்ளது.

அரைவாசிக்கும் மேற்பட்ட போராட்டங்களை ஆராய்ந்ததில் குறைந்தபட்சம் 17 போராட்டங்களில் சட்ட அமுலாக்க அதிகாரிகள் சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களைப் பின்பற்றுவதற்குத் தவறியுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. இந்தப் போக்கு இலங்கையில் அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையை மட்டுப்படுத்துகின்றது.

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையானது பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் உள்ளடங்கலாக பரந்துபட்ட அடிப்படையிலான பிற உரிமைகளை அங்கீகரிப்பதற்கும், உணர்ந்துகொள்வதற்கும் பயன்படக்கூடிய பெறுமதிமிக்கதோர் கருவியாகும்.

இது ஒடுக்கப்பட்ட நிலையிலுள்ள தனிநபர்களுக்கும், குழுக்களுக்கும் மிக அவசியமானதாகும். எனவே அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமைக்கு மதிப்பளித்து, அதனை உறுதிப்படுத்துவதற்கு தவறுவது அடக்குமுறையின் குறியீடாகும். அதேபோன்று அவ்வுரிமையைப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் சார்ந்த கடப்பாடு பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு கட்டமைப்புக்களுக்கு உண்டு.

இருப்பினும் சட்ட அமுலாக்க அதிகாரிகள் போராட்டங்களுக்கு எதிரான சட்டவிரோத பலத்தைப் பிரயோகிப்பது ரணில் விக்ரமசிங்க அரசுத் தலைவராகப் பதவியேற்றதன் பின்னரும் தொடர்ந்தது.

நாட்டின் வட, கிழக்கு மாகாணங்களில் வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களால் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அமைதியான முறையில் இப்போராட்டங்களை முன்னெடுத்தோருக்கு எதிராக பாதுகாப்புப்படையினர் மற்றும் உளவுத்துறை அமைப்புக்கள் தொடர் கண்காணிப்பு, அச்சுறுத்தல், துன்புறுத்தல் மற்றும் இடையூறு விளைவித்தல் ஆகியவற்றை மேற்கொண்டன.

இவ்வாறு அறிக்கை கூறுகின்றது. இந்தப் பத்தியில் ஏற்கனவே அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி ஓர் அறைகுறைச் சர்வாதிகாரம் என்று தெரிவித்திருந்தோம். மன்னிப்புச் சபையின் அறிக்கை அதனை உறுதி செய்யும் விதத்தில் அமைந்திருக்கின்றது.

அமைதியான ஒன்றுகூடல்களை எளிதாக்குவதை அடிப்படையாகக் கொண்ட ஒட்டுமொத்த அணுகுமுறையைப் பின்பற்றுவதுடன் அனைத்து ஆர்ப்பாட்டக்காரர்களினதும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமையை உறுதிசெய்தல், ஆர்ப்பாட்டங்களைக் கையாளும் செயன்முறை சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களுக்கு ஏற்புடையதாக அமைவதை உறுதிசெய்தல், ஆர்ப்பாட்டங்களின்போது சட்டவிரோத படைப்பலம் பிரயோகிக்கப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்ளல், அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்ட அதிகாரிகளை சட்டத்தின்முன் நிறுத்துதல்ஆகியவற்றுக்குரியநடவடிக்கைகளை ஆளும் தரப்பு முன்னெடுக்கவேண்டும்.

கடந்த காலங்களில் ஆர்ப்பாட்டங்களின்போது சட்டவிரோத படைப்பலம் பிரயோகிக்கப்பட்டதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொள்வதுடன், அத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டஅதிகாரிகளைசட்டத்தின்முன்நிறுத்துவதற்குநடவடிக்கை எடுக்குமாறு ஆளும் தரப்பிடம் வலியுறுததுகின்றோம் என்று மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆளும் தரப்பு அதனை ஒருபோதும் செய்யாது ஏனென்றால் இது மக்கள் விரோத, அரைகுறைச் சர்வாதிகார ஆட்சி.

# மற்றும்' ஏன் 'And' ஆகாது?

மு.இராமநாதன்

நடிகர் விஜய் பிப்ரவரி முதல் வாரத்தில் தனது கட்சியை நிறுவினார். கட்சியின் பெயர் – தமிழக வெற்றிகழகம்(SIC). வெற்றிக்கும்கழகத்திற்கும்இடையில் ஒரு 'க்' வந்திருக்க வேண்டும். வரவில்லை. விஜய் விட்டது ஒற்றுப் பிழை. அது எதிர்பாராத ஒரு நல்ல விளைவை உண்டாக்கியது. சமூக வலைதளங்களில் தமிழ் இலக்கணம் பேசுபொருளாகியது. விமர்சனங்களும் பகடிகளும் இணையவெளியைநிறைத்தன. அவைவிஜய்யின் செவிகளை எட்டின. அவர் வெற்றியையும் கழகத்தையும்ஒற்றினார். பிழையைத்திருத்தினார். ஆனால், பிழை அங்கே முடியவில்லை.

விஜய் வெளியிட்டிருந்த அறிக்கையில் 65 பிழைகள் இருப்பதாக ஒரு தமிழன்பர் பதிவிட்டிருந்தார். இலக்கணப் பிழைகள், எழுத்துப் பிழைகள், வாக்கிய அமைப்பில் பிழைகள் முதலான எல்லாப் பிழைகளின் கூட்டுத்தொகைதான் மேற்குறிப்பிட்ட 65. அமெரிக்காவிலோ பிரிட்டனிலோ ஆஸ்திரேலியாவிலோ ஒரு கட்சித் தலைவர் பிழைகள் மலிந்த ஓர் ஆங்கில அறிக்கையை வெளியிடுவதை நினைத்தாவது பார்க்க முடியுமா? எனில், இங்கே அதோர் பிரச்சினையாக இல்லை. விஜய் கட்சிப் பெயரில் இருந்த ஒற்றுப் பிழையை நீக்கியதே பலருக்கும் போதுமானதாக இருந்தது.

### மற்றும் ஒரு பிரச்சினை

விஜய்யின்அறிக்கையில்பிழைகள்அன்னியில் இன்னும் ஒரு பிரச்சினையும் இருந்தது. அந்த அறிக்கையில் அவர் மற்றும் என்கிற சொல்லை ஐந்து இடங்களில் பயன்படுத்தியிருந்தார். எல்லா இடங்களிலும் "and" எனும் ஆங்கிலச் சொல்லுக்கு மாற்றாகத்தான் 'மற்றும்' எனும் சொல்லைப் பயன்படுத்தி இருந்தார். இதற்காக நாம் அவரைக் குறை சொல்ல முடியாது. ஏனெனில், இன்று தமிழ் உரைநடையில் மிகப் பரவலாக மற்றும் என்கிற சொல், and என்கிற சொல்லுக்கு ஈடாகப் பயன்படுத்தப்படுகிறது.

இது தமிழுக்கு இயைந்ததுதானா என்று பேசுவதற்கு முன்னால், விஜய்யின் அறிக்கையில் மற்றும் இடம்பெறும் இடங்களைப் பார்க்கலாம்.

1. நிர்வாகச் சீர்கேடு மற்றும் ஊழல் மலிந்த அரசியல் கலாச்சாரம் ஒருபுறம்,

2. தனக்கு புகழ் பெயர் மற்றும் எல்லாம் கொடுத்த,

3. எனது நீண்ட கால எண்ணம் மற்றும் விருப்பமாகும்,

4. கட்சியின் அரசியலமைப்புச் சட்டம் மற்றும் விதிகள்,

5. தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் மற்றும் கட்சி விரிவாக்க பணிகளுக்குத் தேவையான கால அவகாசத்தைக் கணக்கில் கொண்டே,

### எண்ணும்மை

மேற்கூறிய இடங்கள் அனைத்திலும் உள்ள மற்றும் என்கிற சொல்லை எடுத்துவிட்டு முன்னும் பின்னும் 'உம்' சேர்க்க முடியும். அப்படிச் சேர்த்தால் அந்த வாக்கியங்கள் இப்படியாக மாறும்.

1. நிர்வாகச் சீர்கேடும் ஊழல் மலிந்த அரசியல் கலாச்சாரமும் ஒருபுறம்,

2. தனக்கு புகழும் பெயரும் இன்னும் எல்லாமும் கொடுத்த,

3. எனது நீண்ட கால எண்ணமும் விருப்பமுமாகும்,

4. கட்சியின் அரசியலமைப்புச் சட்டமும் அதன் விதிகளும்,

5. தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரத்தையும் கட்சியின் விரிவாக்கப் பணிகளுக்குத் தேவையான கால அவகாசத்தையும் கணக்கில் கொண்டே,

மற்றும்நீக்கப்பட்டு'உம்'சேர்க்கப்பட்ட வாக்கியங்களில் உயிர் கூடியிருப்பதைக் கவனிக்கலாம். ஏனெனில், அவை தமிழுக்கு இயைந்த உம்மைகளைப் பெற்றுவிட்டன. உம்மைகள் அடுத்தடுத்து வந்தால் அதை எண்ணும்மை என்று அழைக்கிறது இலக்கணம். உம் தன்னை வெளிப்படையாகக் காட்டிக்கொள்ளாமல் மறைந்திருப்பதும் உண்டு. அதாவது உம்மை தொக்கி நிற்கும். அதற்கு உம்மைத் தொகை என்று பெயர்.

### உம்மைத் தொகை

தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் உள்ள புகழ் மிக்க கல்லூரிகளுள் ஒன்று பிஎஸ்ஜி காலேஜ் ஆஃப் ஆர்ட்ஸ் அண்ட் சயின்ஸ் (PSG College of Arts and Science). தமிழில், பூசாகோ கலை அறிவியல் கல்லூரி. கலையும் அறிவியலும் என்பதில் உள்ள உம்மைகள் தொக்கி நிற்க, கலை அறிவியல் என்றாயிற்று. ஆகவே உம்மைத் தொகை. ஆனால், இப்போது கலை அறிவியல் கல்லூரிகளை கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்று எழுதுகிற போக்கு அதிகரித்திருக்கிறது.

உயர்கல்வித் துறையின் இணையத் தளத்திலேயே கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைக் காண முடிகிறது. ரூ199.36 கோடி செலவில் 16 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்படும் என்று அறிவிக்கிறது ஓர் அரசாணை (எண் 152 நாள் 10.8.2022).

### மற்றும் என்றால் என்ன?

ஆங்கிலம், தமிழில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியபின்னர்தான், நம்மவர்கள் ஆங்கிலத்தில் சிந்தித்து தமிழில் எழுதத் தொடங்கியதற்குப் பிறகுதான் 'மற்றும்' இப்படி ஒருவடிவெடுத்திருக்கிறது. அப்படியானால் அதற்கு முன்பு 'மற்றும்' இல்லையா? இருந்தது. ஆனால், 'and' எனும் பொருளில் இல்லை. 'வேறு' என்பது மற்றும் என்கிற சொல்லுக்கு வழங்கிவந்த பொருள்களில் முதன்மையானது எனலாம்.

'மற்றுப் பற்று எனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்பது தேவாரம். உன் திருப்பாதத்தைத் தவிர வேறு பற்றே எனக்கில்லை என்கிறார் சுந்தரர்.

'மற்றை நம் காமங்கள் மாற்றேலோர் எம்பாவாய்' என்கிறது திருப்பாவை. உன்னைத் தவிர வேறு விருப்பங்களை எல்லாம் அழித்துவிடு என்று திருமாலிடம் இறைஞ்சுகிறாள் ஆண்டாள்.

'ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்' என்பது புகழ்பெற்ற திருக்குறள். விதியை வெல்ல நாம் எப்படிச் செயற்பட்டாலும் வேறு ஒரு வழியில் அது நம்முன் வந்து நிற்கும் என்கிறார் வள்ளுவர். (பிறிதொரு இடத்தில் ஊக்கமுடையவர்கள் 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்று சொல்லுவதும் அதே வள்ளுவர்தான்).

இதைத் தவிர 'மேலும்' என்கிற பொருளிலும் 'மற்றும்' கையாளப்பட்டிருக்கிறது. 'இலன் என்று தீயவை செய்யற்க செய்யின் இலனாகும் மற்றும் பெயர்த்து' என்கிற குறளுக்கு சாலமன் பாப்பையா சொல்லும் பொருள்: தன் ஏழ்மையைப் போக்கப் பிறர்க்குத் தீமை செய்யாதே, செய்தால் மேலும் ஏழை ஆவாய்.

ஆகிய என்பீர்!

இப்படியாக 'வேறு', 'மேலும்' போன்ற பொருள்களில் பயன்பட்டுவந்த 'மற்றும்' இன்று ஆங்கிலத்தின் செல்வாக்கால் 'ழிஜ–' என்பதற்கு ஈடாக மாறிவிட்டது. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் இணையதளத்தில்பின்வரும்வாக்கியம்இருக்கிறது.

காஞ்சிபுரம் பட்டுப் புடவை என்பது இந்தியாவில் தமிழ்நாட்டில் உள்ள காஞ்சிபுரம் பகுதியில் தயாரிக்கப்படும் ஒரு வகை பட்டுப் புடவை ஆகும். இந்தப் புடவைகள் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் மற்றும் ஆந்திர பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான பெண்களால் திருமணத்திலும் மற்றும் விசேஷ புடவைகளாக அணியப்படுகின்றன.

இதில் மற்றும் என்பதை எடுத்துவிட்டு தமிழுக்கு ஏற்றபடி மாற்றினால் என்னவாகும்? 'தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்களில் உள்ள பெரும்பான்மையான பெண்கள்' என்றாகும். வாக்கியம் இலகுவாகும். இதே வாக்கியத்தை 'தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், முதலான தென் மாநிலங்களில் உள்ள பெரும்பான்மையான பெண்கள்' என்றும் எழுதலாம். அப்போது தெலுங்கானாவும் தன்னை வெளிக்காட்டாமல் உள்ளே வந்துவிடும்!

தொடர்ச்சி 5ம் பக்கம்..........

# மற்றும்' ஏன் 'And' ஆகாது?

4ம் பக்க தொடர்ச்சி..........

பெயர்களையும் பொருள்களையும் அடுக்குகிறபோது எல்லாவற்றையும் சொல்லிவிட்டால் ஆகிய என்று முடிப்பது வழக்கம் (தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவர் பாண்டவர்கள்). சிலவற்றைச் சொல்லி சிலவற்றை விட்டுவிட்டால் முதலிய என்று முடிக்க வேண்டும் (துரியோதனன், துச்சாதனன், துசாகன் முதலிய நூற்றுவர் கௌரவர்கள்). முதலிய, ஆகிய எனும் சொற்கள் தமிழில் ஆகிவந்தவை. ஆகவே, 'மற்றும்' எனும் சொல்லுக்கு மாற்றாக அமையும்.

### மற்றும் பலர்

எப்போது முதல் 'மற்றும்' 'ழிஜ-'க்கு மாற்றாக வந்தது? இதை ஆய்வாளர்கள்தான் சொல்லவேண்டும். எனக்கு ஓர் ஊகம் இருக்கிறது. இது தமிழ்த் திரைப்படங்களிலிருந்து வந்திருக்கலாம்.

ஆங்கிலத் திரைப்படங்களில் கடைசியாகத்தான் கலைஞர்களின் பெயர்களைப் போடுவார்கள். ஆனால், ஒரேயொரு காட்சியில் வந்திருந்தாலும் ஒற்றை வரி வசனம் பேசியிருந்தாலும் அவர்களின் பெயர் பட்டியலில் இடம்பெறும். இரண்டாவது சேடி, மூன்றாவது பொலிஸ்காரன், சைக்கிள்காரப் பையன் யாரையும் விட்டுவிட மாட்டார்கள். தமிழில் அப்படிப் பழக்கமில்லை. பெரும்பாலும் முதலிலேயே பெயர்கள் வந்துவிடும். மேலும் பாத்திரங்களின் பெயர்களையும் நடிகர்களின் பெயர்களையும் இணைத்துப் போடுவதும் குறைவு. நடிகர்களின் பெயர்களை நட்சத்திர மதிப்பின் வரிசைப்படி போடுவர்கள்.

பாத்திரங்களின் முக்கியத்துவமும் அதே வரிசையில்தான் இருக்கும் (அது யதேச்சையானது அல்ல). இதனால் பிரபலமான பெயர்களுடன் பட்டியல் நின்றுபோகும். அப்படியானால் ஏனைய நடிகர்கள்? அவர்களின் பெயர்களையெல்லாம் இரண்டு சொற்களில் அடக்கினார்கள். அதுதான் 'மற்றும் பலர்'. இரண்டாவது சேடிக்கும் மூன்றாவது பொலிஸ்காரனுக்கும் இதனால் மகிழ்ச்சி ஏற்பட்டதா என்று தெரியாது.

இந்த 'மற்றும் பலர்' என்பதையும் சமீப காலத்தில் கைவிட்டுவிட்டார்கள். பழைய தமிழ்த் திரைப்படங்களின் பெயர்ப் பட்டியலில் தவிர்க்க முடியாத அம்சமாக இருந்த இந்த 'மற்றும் பலர்' ஒருவேளை 'மற்றும்' 'and' ஆனதன் தொடக்கப்புள்ளியாக இருக்கலாம்.

### தலைப்புகளில் மற்றும்

இதில் 'and' என்பதற்கு மாற்றாக 'மற்றும்' புழக்கத்தில் வந்துவிட்டதே, அதை நாம் இழக்க வேண்டுமா? உரைநடையில்தானே மற்றும் நெருடுகிறது? தலைப்புகளில் வைத்துக்கொள்ளலாமே? எடுத்துக்காட்டாக, 'தமிழ்நாடு டெக்ஸ்ட் புக் அண்ட் எஜுகேஷனல் சர்வீசஸ் கார்பரேஷன்' (Tamil Nadu Text Book and Educational Services Corporation) என்பதைத் தமிழில், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் என்று அழைக்கிறார்கள்.

இது நிறுவனத்தின் பெயர், சொற்சிக்கனம் நல்லது. இம்மாதிரியான இடங்களில் 'and' என்பதற்கு மாற்றாக 'மற்றும்' எனும் சொல்லைப் பயன்படுத்தலாம் என்றே நினைக்கிறேன்.

### என்ன செய்யலாம்?

பழந்தமிழ்க் கவிதைகளில் மற்றும் என்பது அதன் இயல்பான பொருளில் பயின்றுவந்ததைப் பார்த்தோம். நவீன கவிதைகளிலும் 'மற்றும்' எனும் சொல் 'and' எனும் பொருளில் வருவதில்லை. சிறுகதைகளிலும் பார்க்க முடியாது. ஏனெனில் அவை படைப்பிலக்கியங்கள், தமிழிலேயே எழுதப்படுகின்றன. நேர்ப் பேச்சுகளிலும் இந்த 'மற்றும்' என்கிற சொல் 'and' பொருளில் இடம்பெறுவதில்லை. கட்டுரைகளிலும் அறிவிப்புகளிலும் செய்திக்குறிப்புகளிலும்தான் 'மற்றும்' வருகிறது. அங்கேதான் மொழிபெயர்ப்பு நடக்கிறது. கட்டுரைகளைத் தமிழிலேயே எழுதினாலும் எழுதுகிறவரின் பேனாவிற்குள்ளிருந்து ஆங்கிலக் கல்வி செயல்படுகிறது. ஆகவே 'மற்றும்' கோலோச்சுகிறது.

ஒரு தமிழ் வாக்கியத்தில் எப்படி 'and' என்று எழுதமாட்டோமோ, அவ்விதமே அதற்கு ஈடாக 'மற்றும்' என்று எழுதுவதையும் தவிர்க்க வேண்டும். அப்படிச் செய்யத் தொடங்கினால் விஜய்யின் அறிக்கையில் எண்ணும்மைகள் இடம்பெறும். உயர்கல்வித் துறை உம்மைத் தொகையைப் பயன்படுத்தும். காஞ்சிபுரம் ஆட்சியர் ஆகிய அல்லது முதலிய என்கிற சொல்லைப் பயன்படுத்துவார்.

மேலும், 'மற்றும்' என்பது 'and' எனும் பொருளில் வந்தேறியது. கூழலுக்குளற்றாற்போல் எண்ணும்மைகளையும், உம்மைத் தொகைகளையும், ஆகிய / முதலிய எனும் சொற்களையும் பயன்கொண்டால் மற்றும் வந்த வழி திரும்பிவிடும். அப்போது மற்றுப்பற்றெமக்கில்லை என்றாகும்.

**நன்றி: அருஞ்சொல்**

# பொருள்களின் விலைகள் சதொசவில் குறைப்பு



*பண்டிகை காலத்தை முன்னிட்டு பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.*

*அனைத்து சதொச விற்பனை நிலையங்களிலும் இந்த விலைக் குறைப்பு செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் அமலுக்கு வந்திருக்கிறது.*

*விலை விவரங்கள் வருமாறு:*

*ஒரு கிலோகிராம் செத்தல் மிளாகாயின் விலை 300 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் விலை 850 ரூபாவாகும்.*

*சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோவின் விலை 120 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 375 ரூபாவாகும்.*

*இந்தியா மற்றும் பாகிஸ்தானில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பெரிய வெங்காயம் ஒரு கிலோ கிராமின் விலை 50 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 445 ரூபாவாகும்.*

*வெள்ளைப் பூண்டு ஒரு கிலோ கிராமின் விலை 15 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் புதிய விலை 680 ரூபாவாகும்.*

*உருளைக்கிழங்கு ஒரு கிலோ கிராமின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ள நிலையில், அதன் புதிய விலை 165 ரூபாவாகும்.*

*இதேவேளை, ஒரு கிலோ சிவப்பு பருப்பின் விலையை 7 ரூபாவாலும், ஒரு கிலோ வெள்ளை நாட்டரிசியின் விலையை 3 ரூபாவாலும் சதொச நிறுவனம் குறைத்துள்ளது.*



காலைக்கதிர் Kalaikkathir



# சேறு பூசாமல் பகிரங்கமாக விவாதிப்பதற்கு வாருங்கள்

## எதிர்க் கட்சித் தலைவர் பொறாமை கொண்டோருக்கு அழைப்பு

சேறுபூசாமல்பகிரங்கவிவாதத்திற்கு வாருங்கள். எந்நேரத்திலும் அதற்கு நாங்கள் தயார் என்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 148 ஆவது கட்டமாக10இலட்சம்ரூபாபெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், புத்தளம், ஆனமடுவ, கன்னங்கர மாதிரி பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

வைத்தியசாலை உபகரணங்கள், திறன் வகுப்பறை உபகரணங்கள், பாடசாலை பேரூந்துகள் வழங்குவதை பகிர்ந்தளித்து வருவதான செயல் என்று எமது நாட்டிலுள்ள சிலர் அதை எதிர்த்து எனக்கு பல்வேறு புனைப்பெயர்களை சூட்டி வருகின்றனர்.

இவ்வாறு எனக்கு புனைப் பெயர்களை சூட்டி வருகின்றவர்கள் கல்விகற்றபாடசாலைகளுக்கும்நானே பேருந்துகளை வழங்கி வைத்தேன். பேருந்தை நன்கொடையாக வழங்கிய பின்னரும்பேருந்துபழுதடைந்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் போலியான செய்திகளை பரப்பி அரசியல் ரீதியான பொறாமைத்தன செயல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எமது நாட்டில் யாராவது ஏதாவது நல்லது செய்தால் அதை சிலரால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இத்தகைய பொறாமை குணம் கொண்டவர்கள் என்ன சொன்னாலும், தான் உட்பட ஐக்கிய மக்கள் சக்தியினர் நாட்டின் எதிர்காலம் மற்றும் முன்வைக்கப்படும் மாற்று கருத்துக்கள் குறித்து எந்நேரத்திலும் விவாதிக்கத் தயாராக இருக்கின்றேன்.

விவாதத்திற்கு வரும்போது, அதிகாரம் இல்லாமல் மக்களுக்கு ஆற்றிய சேவை குறித்து பேசுவதற்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழு கூட தயாராக இருக்கிறது.

நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தாமல் சேறுபூசும் அரசியலை விடுத்து, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எதிர்கால வேலைத்திட்டம் குறித்த விவாதத்திற்கு முன்வாருங்கள், இந்த விவாதத்திற்கு நான் விருப்பத்துடன் கலந்து கொள்வேன். கலந்து கொண்டு ஐக்கிய மக்கள் சக்தி நாட்டை கட்டியெழுப்ப வகுத்துள்ள வேலைத்திட்டத்தை முன்வைக்கவும் தயார் என்றார்.

# பணம் கொடுத்து மருத்துவம் படிக்க ரணிலின் அமைச்சரவை அனுமதி

கட்டண முறையில் மருத்துவக் கற்கையைத் தொடர்வதற்குஅமைச்சரவைஅனுமதிஅளித்துள்ளது. அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்தின் படி, ஜெனரல் சிறீ மத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 1988 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல அரச பாதுகாப்பு பயிற்சி நிறுவன (திருத்தச்) சட்டத்தின் மூலம் பல்கலைக்கழகமாகமாற்றப்பட்டுள்ளது. படைத்துறைச் சேவையின் தேவைகளுக்கமைய, மருத்துவ தொழில்வாண்மையாளர்களாக மாணவர் படையணி அலுவலர்கள் பயிற்றுவிக்கப்பட்டு மருத்துவம் மற்றும் அறுவையியல் MBBS பட்டப்படிப்பை வழங்கப்படுவதற்காக 2011 ஆம் ஆண்டில் இப்பல்கலைக்கழகம் மருத்துவ பீடமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய தற்போது உள்நாட்டு மாணவர்கள் முப்படைக்கு அல்லது பொலிஸுக்கு கெடட் அலுவலராக இணைந்து கொள்வதன் மூலமும்,தகைமைபெற்றவெளிநாட்டுமாணவர்களும் கட்டணமுறையில்மாத்திரம்இப்பல்கலைக்கழகத்தில் மருத்துவப் பட்டப்படிப்புக்கான வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாய்ப்புகளை மேலும் விரிவாக்கம் செய்து 2024 கற்கை ஆண்டு தொடக்கம் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளஉள்நாட்டுவிண்ணப்பதாரிகளுக்கும் கட்டண அடிப்படையில் மருத்துவ பட்டப்படிப்பில் இணைத்துக் கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையில் ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களில்மாணவர்களை இணைப்புச் செய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கடைப்பிடிக்கப்படுகின்ற ணு வெட்டுப்புள்ளித் திட்டத்திற்கு மேலதிகமாக, தகைமைகள்சிலவற்றைகொண்டுதயாரிக்கப்பட்டுள்ள அளவுகோல்களைப் பின்பற்றி, கட்டண முறையில் மருத்துவம் மற்றும் அறுவையியல் பட்டப்படிப்பை கற்பதற்கு ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்திற்கு பட்டப்படிப்புக்காக மாணவர்களை உள்ளீர்த்துக் கொள்வதற்காக பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# திருமலையில் ஒருவர் கைது ஹெரோயினும் பிடிபட்டது

திருகோணமலை தலைமையாக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமேத்ராகம பிரதேசத்தில் ஒருவரை கைது செய்திருக்கும் தாம் அவரிடமிருந்து ஹெரோயின் போதைப்பொருளையும் கைப்பற்றினர்என்றுதிருகோணமலை தலைமையாக பொலிஸார் தெரிவித்தனர் .

விசேடபொலிஸ்அதிரடிப்பிரிவுடன் இணைந்துதலைமையாகபொலிஸார் மேற்கொண்ட பொலிஸார் 36 வயதுடைய நபர் ஒருவரைக் கைது செய்ததுடன், அவரிடமிருநந்து இருந்து விற்பனைக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஹெரோயினை தாம் கைப்பற்றினர் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட ஹெரோயின் நிறை 3 கிராம் 300 மில்லி கிராம் எனவும் தெரிவிக்கப்பட்டது. 84 பொட்டலங்களாக்கப்பட்ட நிலையில் அவை அவரிடம் காணப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட நபர் ஒரு போதை பொருள் வியாபாரி எனவும் அவர் மீது நீதிமன்றத்தில் நான்கு வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வவுனியா குளத்தில் சடலம் மீட்பு அடையாளம் காண உதவுங்கள்



வவுனியா, நெளுக்குளம் குளத்தினுள் இன்று காலை சடலம் மீட்கப்பட்டுள்ளது. சடலத்தினை அடையாளம் காண உதவுமாறு நெளுக்குளம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குளக்கட்டு பாதையூடாகச் சென்ற நபரொருவர் குளத்தினுள்சடலம்மிதப்பதினைஅவதானித்து பொலிஸாருக்குத்தகவல்வழங்கினார். சம்பவ இடத்திற்குவிரைந்தநெளுக்குளம்பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

குளக்கட்டின் மேற்பகுதியில் ஒரு சோடி காலணி காணப்படுகின்றது. குளத்தில் தண்ணீர் எடுக்கச் சென்றவர் தவறி வீழ்ந்து இறந்திருக்கக்கூடுமோ என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தடயவியல் பொலிஸார் அது குறித்த விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். சடலத்தினை அடையாளம் காண உதவுமாறும் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சடலமாக காணப்படும் நபர் மஞ்சள் நிற மேற்சட்டையும் சாரமும் அணிந்துள்ளார். 55 தொடக்கம் 60 வயதுக்குட்டவராக இருக்கலாம் எனப் பொலிஸார் மதிப்பிட்டுள்ளனர். (100)



## இணங்கிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

கேள்வி - புதிய அரசியல் கூட்டணிகள் உருவாக்கப்படுகின்றன, கூட்டணி தொடர்பில் நீங்கள் கவனம் செலுத்தவில்லையா ?

பதில்: புதிய அரசியல் கூட்டணி குறித்து பல்வேறு தரப்பினருடன் பேச்சு நடத்தி வருகின்றோம். வெகுவிரைவில் பரந்துப்பட்ட அரசியல் கூட்டணி அமைக்கப்படும்.

கேள்வி: உங்களின் தாய்க் கட்சியான சிறீ லங்கா சுதந்திரக் கட்சி தீப்பற்றி எரிகிறதே, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நீங்கள் ஆலோசனை வழங்கப் போவதில்லையா?

பதில்: -சந்திரிக்கா அம்மணி வந்து தலைவர் மைத்திரியை விரட்டியடித்துள்ளார். தவறுகள் தற்போது திருத்திக் கொள்ளப்படுகின்றன. சுதந்திரக் கட்சி பல சவால்களை எதிர்கொண்டுள்ளது. சுதந்திர கட்சியை கட்டியெழுப்பும் உரிமை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு உண்டு.

கேள்வி : குறுகிய காலத்தில் சிறீ லங்கா பொது ஜன பெரமுன எழுச்சிப் பெற்றதை போன்று சுதந்திர கட்சியும் எழுச்சி பெறும் என்று எதிர்பார்க்கின்றீர்களா ?

பதில்:- நிச்சயமாக சுதந்திர கட்சி மீண்டும் எழுச்சிப் பெறும்.

கேள்வி : ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொது ஜன பெரமுனவுடன் இணக்கமாகச் செயற்படுகிறாரா ?

பதில்:- இணக்கமாக செயற்படும் வரை இணைந்து பயணிப்போம் முடியாவிடின் விலகி விடுவோம்.

கேள்வி : பொது ஜன பெரமுனவின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்கப் போவதில்லை என ஆளும் தரப்பின் உறுப்பினர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிடுகிறாரே?

பதில்: அது அவரது தனிப்பட்ட நிலைப்பாடு. கட்சியின் உறுப்பினரை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்குவோம் - என்றார்.

## குற்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விடயம் வலியுறுத்தப்பட்டது.

பிரிவெனாக்களை ஆரம்பித்தல், அறநெறிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்குதல், கல்வியற் கல்லூரிகளை நிறுவுதல் உள்ளிட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் தற்போதைய ஜனாதிபதி, நாடாளுமன்ற உறுப்பினர், பிரதி அமைச்சர், அமைச்சர் மற்றும் பிரதமர் உள்ளிட்ட பதவிகளின் கீழ் ஆற்றிய சேவைக்கு சாசன பாதுகாப்புச் சபை இந்தச் சந்திப்பில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

மாணவர் சமூகம் அறநெறி பாடசாலைக் கல்வியை முறையாகக் கற்க வாய்ப்பு வழங்குதல், பௌத்த அறநெறி தேர்ச்சி பெற்றவர்களுக்கு ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கல், பூஜாபூமி காணி உரிமம் இல்லாத விகாரைகளுக்கு அவற்றை வழங்க நடவடிக்கை எடுத்தல், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் தேரவாத பௌத்தத்திற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை இனங்காணல், அதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலான பரிந்துரைகள் இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியிடம் முன்மொழிவுகள் வைக்கப்பட்டன.

மேலும், நாட்டின் இருப்புக்கும், மத மறுமலர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பிராந்திய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக, உள்நாட்டு கல்வி மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட பரிந்துரைகளும் முன்மொழியப்பட்டுள்ளன.

இந்த முன்மொழிவுகளில் பெரும்பாலானவை நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைவாகவே அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கு மாறான சில நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கவனத்திற்குக் கொண்டு வரப்படும் எனவும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜயபூமி, சுவர்ணபூமி போன்ற உரிமம் பெற்ற காணி உரிமையாளர்களுக்கு நாடளாவிய ரீதியில் 'உறுமய' தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் நிரந்தர காணி உறுதி பத்திரம் வழங்கும் வேலைத்திட்டத்தை ஜனாதிபதி ஏற்கனவே நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய விவசாய நவீனமயமாக்கல், மலையகதசாப்தம் உள்ளிட்ட வேலைத்திட்டங்கள் வெற்றியடைவதற்கும் எதிர்காலத்தில் சம்பந்தப்பட்ட பிராந்திய சாசன பாதுகாப்புச் சபைகளின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன், இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் அது குறித்த செயற்பாடுகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அறிவிக்கவிருப்பதாகவும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



# நோன்புப் பெருநாள் தொழுகைகள்

## சாய்ந்த மருதில்...





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)


சாய்ந்தமருது - மாளிகைக்காடுஜூம்ஆப் பெரிய பள்ளிவாசலில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை நேற்று இடம்பெற்றது.

ஆண்கள் மற்றும் பெண்கள் என ஒரே தடவையில் கலந்துரையாடினர். குறிக்கப்பட்ட உரியநேரத்தில் பள்ளிவாசலின் பேஷ் இமாம் எம்.ஐ. ஆதம்பாவா ரஷாதியினால் தொழுகையும் துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றது.

ஜூம்ஆப்பள்ளிவாசல் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவர் ஏ. ஹிபத்துல் கரீம், செயலாளர் ஐ.எல்.எம். மன்சூர், பொருளாளர் ஏ.ஏ. சலீம் உட்பட நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் உறுப்பினர்கள், ஜமாஅத்தார்கள், பெண்கள், சிறுவர்கள்தொழுகையில் கலந்துகொண்டனர்.

## கல்முனை...





(எஸ்.அஷ்ரப்கான்)

புனிதநோன்புப்பெருநாள்நபிவழித் திடல் தொழுகை கல்முனை ஹூதா திடலில் ஹூதா ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் முஹம்மதிய்யா ஜும்ஆ பள்ளிவாசல்களின் ஏற்பாட்டில்நடைபெற்றது.

இங்கு பெருநாள் தொழுகையையும் குத்பாபிரசங்கத்தையும் மௌலவி அஷ்ஷெய்க் எம்.எப்.எம்.ஜவ்ஸாத் (ஸலாமி) நிகழ்த்தினார்.

ஆயிரக்கணக்கான மக்கள் நோன்புப் பெருநாள் தொழுகையில் கலந்துகொண்டனர். பலஸ்தீன் காஸா மக்களுக்காக பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

## மருதமுனையில்...



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மருதமுனைஇஸ்லாமியபரப்புரை மையம், அக்பர் ஜும்ஆ பள்ளிவாசல் மற்றும் பாக்கியத்துசாலிஹாத் பள்ளிவாசல் என்பன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புனித ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகை மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் காலை 6:20 மணிக்கு நடைபெற்றது.

இம்முறை கடற்கரை திறந்தவெளியில் இமாம் ஜமாத்தாக நடைபெற்ற புனித நோன்புப் பெருநாள் தொழுகையில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர். பெருநாள் தொழுகைமற்றும்அதனைத்தொடர்ந்து இடம்பெற்ற குத்பா பிரசங்கத்தையும் மௌலவிஅஷ்ஷெய்க்கலாநிதிஎம்.எல். முபாறக் (மதனி) நடாத்தினார்கள்.

ஆண்கள், பெண்களுக்கு வெவ்வேறாகஇடவசதிகள்ஒதுக்கப்பட்டு தொழுகை இடம்பெற்றமைது. பெருநாள் தொழுகையின்பொது, பொலிஸார், தரைப்படையினர் மற்றும்கடற்படையினரும்கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

## முள்ளிப்பொத்தானையில்...



(ஹஸ்பர்)

புநோன்பு பெருநாள் திடல் தொழுகை முள்ளிப்பொத்தானை ஈச்சநகர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதனை முள்ளிப்பொத்தானை புஹாரி ஜூம்மா பள்ளி நிர்வாகத்தினர ஏற்பாடு செய்திருந்தனர். தொழுகையை உலமா சபையின் தம்பலகாமம் பிரதேச தலைவர் மௌலவி குசைன் மற்றும் மௌலவி முர்சித் ஆகியோர்கள் வழிநடாத்தினர்.

ஒவ்வொருவருக்கொருவர் கைலாகு கொடுத்து முசாபகா செய்வதன் மூலம் அங்கு சகோதரத்துவமும் ஒற்றுமையும் வலியுறுத்தப்பட்டன.

நூற்றுக்கணக்கான பெண்கள், ஆண்கள் எனப் பலரும் தொழுகையில் கலந்துகொண்டனர்.

## கிண்ணியாவில்....



(ஹலால்தீன்)

கிண்ணியாவில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை இன்று காலை ஆறு முப்பது மணிக்கு நகர சபை மைதானத்தில் இடம் பெற்றது.

இத்தொழுகையில் ஆண்கள், பெண்கள் இருபாலரும் கலந்து கொண்டனர்.

மௌலவி அப்துல்லாஹ் ரபீஸ் தொழுகையினை முன்னின்று நடத்தினார்.

சுமார் 500 க்கும் மேற்பட்ட ஆண்கள் பெண்கள் என இரு பாலரும் புனித நோன்பு பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டனர் கலந்து கொண்டனர்.

அத்துடன் தமது அன்பினை முஸாபஹா (ஒருவரை ஒருவர் அனைத்து கொள்ளுதல்) செய்வதன் மூலம் வெளிப்படுத்தினர்.

## மாளிகைக்காட்டில்...



(நூருல் ஹுதா உமர்)

ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகையும் குத்பாப் பிரசங்கமும் நேற்று மாளிகைக்காடு அந் நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசலில் இடம்பெற்றது.

மாளிகைக்காடுஅந்நூர்ஜும்மாபெரியபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரால் வழமைபோன்று இந் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பெருநாள் தொழுகையும் குத்பாப் பிரசங்கமும் அந் நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷெய்க் ஏ.எம்.எம். மின்ஹாஜ் (உஸ்மாணி) அவர்களால் நடத்தப்பட்டன.

நோன்புப் பெருநாள் தொழுகையில் மார்க்க அறிஞர்கள், ஊர் பிரமுகர்கள், ஊடகவியலாளாகள், புத்திஜீவிகள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டிருந்தனர்.

# நோன்புப் பெருநாள் தொழுகைகள்

## அக்கரைப்பற்றில்...



(எம்.ஏ.றமீஸ்)

புனித நோன்புப் பெருநாளை அம்பாறை மாவட்டத்தில் உள்ள மக்கள் மிகவும் அமைதியான முறையில் கொண்டாடி மகிழ்ந்தனர். அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் காலை வேளையில் புனித நோன்புப் பெருநாள் தொழுகை பள்ளிவாசல்கள், பொது மைதானங்கள், திடல்கள் போன்றவற்றில் இடம்பெற்றன.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பெருநாள் தொழுகை மௌலவி எம்.ஐ.எம். அன்சார் தப்லீஹி தலைமையில் இடம்பெற்றது. பெருநாள் தொழுகையினைத் தொடர்ந்து நாட்டில் நீடித்த சமாதானம் மிளிரவும் இனங்களிடையே ஒற்றுமை கட்டியெழுப்பப்பட வேண்டியதன் முக்கியத்துவம் பற்றியும், இறையச்சம் ஒவ்வொருவரிடத்திலும் இருக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் விஷேட குத்பா பிரசங்கமும் இடம்பெற்றது.

பெருநாள் தொழுகையினைத் தொடர்ந்து அதில் கலந்துகொண்டவர்கள் உறவினர்கள், நண்பர்கள் போன்றோருக்கு கைலாகு கொடுத்து ஆரத்தழுவி சகோதரத்துவத்தினை வலுப்படுத்திக் கொண்டனர்.

## வவுனியாவில்....



வவுனியா, தவ்ஹீத் ஜமாஅத் ஏற்பாட்டில் புனித நோன்புப் பெருநாள் திடல் தொழுகை வேப்பன்குளம் குளக்கட்டு ஒழுங்கையில் அமைந்துள்ள திடலில் நேற்றுக் காலை நடைபெற்றது.

தொழுகையை அஷ்ஷெய்க் அல்-ஹாபிழ் ஈ.எல்.றதீம் (மீஸானி) நடாத்தினார்கள்.

இதன்போது பெருந்தொகையான இஸ்லாமியர்கள் கலந்து கொண்டு தொழுகையில் ஈடுபட்டதுடன், றம்லான் வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர்.

(100)

# வவுனியா – கம்பகா மாவட்ட தமிழ் மாணவர்களுக்கு உதவி

### ஆஸி - இலங்கை மாணவர் கல்வி நிதியம் வழங்கியது



வவுனியா மற்றும் கம்பகா மாவட்டங்களில் கற்கும் தமிழ் மாணவர்களுக்கு கற்றலுக்கான உதவிகளை ஆஸ்திரேலிய-இலங்கை மாணவர் கல்விநிதியம் வழங்கியுள்ளது.



ஆஸ்திரேலியாவில் 36 வருடங்களாக இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனமான இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் அனுசரணையுடன் புலமைப் பரிசில் உதவியைப் பெற்றுவரும் மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு இவ்வாண்டும் வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட மாணவர்களுக்கு யாழ். சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாகவும், அம்பாறை மாவட்ட மாணவர்களுக்கு , அங்கிருக்கும் மாணவர் கல்வி நிறுவகத்தின் ஊடாகவும், மலையகத்தில் - நுவரேலியா மாவட்டத்தில் மலையக சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஊடாகவும் இவ்வாண்டின் முற்பகுதிக்கான நிதியுதவிகள் வழங்கப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வதியும் தமிழ் மாணவர்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

அண்மையில் வவுனியா மாவட்ட மாணவர்களுக்கான நிதிக்கொடுப்பனவு நிகழ்வு, இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் வவுனியா தொடர்பாளர் அமைப்பான நலிவுற்ற சமூக அபிவிருத்திக்கான தன்னார்வ அமைப்பின் தலைவர் த. கணேஷ் தலைமையில் நடைபெற்றது.

கம்பகா மாவட்டத்தில் நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கான நிதி வழங்கும் நிகழ்வு, கல்லூரி அதிபர் நா.புவனேஸ்வரராஜா தலைமையில், மாணவர் தொடர்பாளர் ஆசிரியை செல்வி லோஜினியின் ஒழுங்கமைப்பில் நடைபெற்றது. இந்த நிகழ்வுகளில் மாணவர்களின் தாய்மாரும் கலந்துகொண்டனர்.

ஆஸ்திரேலியாவில் 1988ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இலங்கை மாணவர் கல்வி நிதியம், ஆரம்ப காலங்களில், இலங்கையில் நீடித்த போரினால், தந்தையை , குடும்பத்தின் மூல உழைப்பாளியை இழந்த ஏழைத் தமிழ் மணவர்களுக்கு உதவியது என்றும்

போர் முடிவுக்கு வந்தபின்னர், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களையும் இந்த புலமைப்பரிசில் திட்டத்தில் இணைத்துக்கொண்டு உதவி வருகிறது என்றும் அந்த அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இரணைமடுவின் கீழான சிறுபோகம் இம்முறையும் பங்கீட்டு அடிப்படையில்

### நேற்றைய கூட்டத்தில் முடிவு

இரணைமடுக் குளத்தின் கீழான சிறுபோகச் செய்கையை இம்முறையும் பங்கீட்டு அடிப்படையிலேயே மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்முறை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சுழற்சி முறைச் செய்கையை விவசாயிகள் பலர் எதிர்த்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வடமாகாணத்தின் பெரும் நீர்ப்பாசன குளமாகிய இரணைமடு குளத்தின் 2024ஆம் ஆண்டுக்கான சிறுபோக செய்கை சம்மந்தமான விசேட கலந்துரையாடல் மாவட்ட மேலதிகச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

கலந்துரையாடலில் கரைச்சி பிரதேச செயலாளர், கமநல அபிவிருத்தி திணைக்கள மாவட்ட பிரதி ஆணையாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், இரணைமடு கமக்காரர் அமைப்புக்களின் சம்மேளனத்தின் கீழ் உள்ள 22 கமக்காரர் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

இரணைமடு குளத்தின் கீழான சிறுபோக செய்கை அளவை தீர்மானிக்கும் கலந்துரையாடல்கள் முடிவு எட்டப்படாது இழுபறி நிலையில் சென்ற நிலையில் ஏப்ரல் 8 மாவட்ட பதில் செயலாளர் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிகளுடனான கலந்துரையாடலை அடுத்து சுழற்சி முறையில் 15,560 ஏக்கர் செய்கை பண்ணுவதாக தீர்மானிக்கப்பட்டது.

சுழற்சி முறை வேண்டாம் எனத் தெரிவித்து விவசாயிகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுத்த நிலையில் நேற்றைய கலந்துரையாடலுக்கு நாள் குறிக்கப்பட்டது. பல மணி நேர கலந்துரையாடலின் பின்பு சுழற்சி முறையை தவிர்த்து பங்கீட்டு முறையில் வழமை போன்று சிறுபோகச் செய்கையில் மேற்கொள்வதாக தீர்மானம் எட்டப்பட்டது.

(113)

# சோள விதைகளை விற்க முடியாது வவுனியா விவசாயிகள் அந்தரிப்பு



வவுனியாவில் செய்கை பண்ணப்பட்ட கலப்பின சோள விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் அந்தரிக்கிறார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் உற்பத்தி செயயப்பட்ட 1 கோடி 75 இலட்சம் ரூபாய் பெறுமதியான புதிய கலப்பின சோழன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலையில் விவசாயிகள் காணப்படுபகின்றனர்.

புதிய கலப்பின சோழன் உற்பத்தியானது பூவரசன்குளம், குருக்கள் புதுக்குளம், மணியர்குளம், எருக்கலம்கல், வேலங்குளம், பாவற்குளம் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 300 ஏக்கர் வரையிலான நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டது.

சோளச் செய்கையில் ஈடுபட்டவர்கள் கலப்பின சோளன் விதைகளை பதப்படுத்தி அதனை நெளுக்குளம் பகுதியில் அண்மையில் திறந்து வைக்கப்பட்ட சோளன் விதை உற்பத்தி களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தி வைத்துள்ளபோதும் குறித்த சோளன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக சோளன் உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் பலரும் பெரும் நட்டம் அடையும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது சிறுபோக பயிற் செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதும், ஏற்கனவே சோளன் உற்பத்தியில் ஈடுபட்ட விவசாயிகள் தவிர ஏனைய விவசாயிகளுக்கு சோளப் பயிற் செய்கை மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளையும், ஆலோசனைகளையும் சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் முறையாக மேற்கொள்ளாமையால் குறித்த சோளன் விதைகளை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தொடர்ந்தும் இந்த நிலை நீடித்தால் அதன் முளை திறன் குறைவடைந்து அவற்றை கைவிட வேண்டிய நிலை ஏற்படும் என விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# "அரிசி விலையைக் குறை" வட - கிழக்கில் போராட்டம்




(ஹஸ்பர் ஏ.எச்)

அரிசி விலையை குறைக்க கோரி திருகோணமலை நகர சபைக்கு முன்னாலும் யாழ்ப்பாணத்தில் மையப் பேருந்து நிலையத்தின் முன்பாகவும் கவனயீர்ப்பு போராட்டங்கள் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றன. குறித்த போராட்டத்தை வடக்கு கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

பட்டினிச்சாவுஎமக்குவேண்டாம், இலங்கை ஆட்சியாளர்கள் அரிசி விலையைக் குறைக்கவேண்டும் போன்ற கோரிக்கைகளை அவர்கள் வலியுறுத்தினர்.



பொருளாதாரசுமையில்இருந்து மக்களை இந்த ஆளும் தரப்புப் பாதுகாக்க வேண்டும் என்பதும் அவர்களின் கோரிக்கையாக இருந்தது. பொருட்களுக்கான விலையை குறைக்க வேண்டும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இதனைப் புரிந்துகொண்டு மக்களுக்காக செயற்பட்டு விலைகளை குறைக்க முன்வரவேண்டும்,வாக்குகளுக்காக மாத்திரம் மக்களிடம் வராமல் மக்களின் பிரச்சினைகளையும் தீர்க்க வரவேண்டும் என்று போராட்டக்காரர்கள்வலியுறுத்தினர்.

டொலர் பெறுமதி அதிகரிக்கும் போது பொருட்களின் விலை அதிகரிக்கிறது ஆனால் டொலரின் பெறுமதிகுறையும்போதுஏன்பொருட்களின்விலைகுறைவதில்லைஎன்று அவர்கள் கேள்வி எழுப்பினர். அரிசிக்கான நிர்ணய விலையை வகுத்து மக்களை காப்பாற்றுங்கள் எனவும் போராட்டக்காரர்கள் வலியுறுத்தனிர்

மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் போராட்டக்காரர்களால் துண்டறிக்கைகளும்விநியோகிக்கப்பட்டதுடன் பொது இடங்களிலும் அவை ஒட்டப்பட்டன.

# பத்தரமுல்லயில் புத்தாண்டுச் சந்தை

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் புத்தாண்டு சந்தை செவ்வாய்க்கிழமைதிறந்துவைக்கப்பட்டது.சிங்களமற்றும்தமிழ்புத்தாண்டுக்கு தேவையான சகல பொருட்களையும்பெற்றுக்கொள்ளவாடிக்கையாளர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த சந்தையில் துணிக்கடை, பாண் கடை, பால் கடை, இனிப்பு கடை, பலகாரக் கடை மிட்டாய் கடை, மட்பாண்டக் கடை மற்றும் தொதல் கடை உள்ளிட்ட பல கடைகள் உள்ளன.

இந்த சந்தையில் துணிக்கடை, பாண் கடை, பால் கடை, இனிப்பு கடை, பலகாரக் கடை மிட்டாய் கடை, மட்பாண்டக் கடை மற்றும் தொதல் கடை உள்ளிட்ட பல கடைகள் உள்ளன.

இந்நிகழ்வில் வோட்டர்ஸ் எட்ஜ் நிறுவனத்தின் தலைவர் மலித் பெரேரா, நிர்வாக சபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள்கலந்துகொண்டனர்.



காலைக்கதிர்
Kalaikkathir

# சித்திரை புத்தாண்டை முன்னிட்டு கட்டைபறிச்சானில் சிறப்பு நிகழ்வு



(ஹஸ்பர் ஏ.எச்)

மூதூர் கிழக்கு - கட்டைபறிச்சான் தங்க நட்சத்திரம் விளையாட்டுக் கழகத்தினால் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்பு நிகழ்வுகள் செவ்வாய்க்கிழமை தொடங்கின. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விளையாட்டு நிகழ்வைத் தொடக்கி வைத்தார்.

முதல்நிகழ்வாகபெண்களுக்கானவலைப்பந்தாட்ட போட்டி இடம்பெற்றது. வீரர்கள் ஆளுநருக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் போட்டிகளைத் தொடக்கி வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரின் சேவையினை பாராட்டிஏற்பாட்டுகுழுவினர் அவருக்குபொன்னாடை போர்த்திநினைவுச்சின்னம்வழங்கிக்கௌரவித்தனர்.

இந்நிகழ்வில் ஏனைய அதிதிகளாக மூதூர் பிரதேச செயலாளர், பிரதேச சபையின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

கட்டைபறிச்சான் தங்க நட்சத்திரம் விளையாட்டு கழகத்தினால் சித்திரை புத்தாண்டை முன்னிட்டு மரதன் ஓட்டம் ,படகோட்டம், வழுக்கு மரம் ஏறுதல், கயிறிழுத்தல், சைக்கிளோட்டம், சங்கீதக் கதிரை, முட்டியுடைத்தல், பலூனுடைத்தல், மிட்டாய்




# பெருந்தோட்ட தொழிலாளர் சம்பள உயர்வுக்கு உலக தொழிலாளர் சம்மேளனம் வலியுறுத்து



தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு கிடைக்கப்பெறுவதற்கு அறிவித்தல் விடுப்பு - சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் தெரிவிப்பு

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு கிடைக்கப்பெறுவதற்கு சர்வதேச தொழிலாளர் சம்மேளனம் தமது அதிகார எல்லைக்குட்பட்ட வகையில் அனைத்து அறிவித்தல்களையும் விடுத்துள்ளது என்று மேற்படி சம்மேளனத்தின் பிரதானிகள், அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் தெரிவித்துள்ளனர்.

ஜீவன் தொண்டமானின் ஊடகப் பிரிவு இனை அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான இயக்குநர் ஜொனி சிம்ப்சனிற்கும், இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்புவசதிகள்அபிவிருத்திஅமைச்சருமான ஜீவன் தொண்டமானிற்கும் இடையிலான சந்திப்பு கொழும்பிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

மேற்படி சந்திப்பின்போது முக்கிய பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன், தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வை பெற்றுக் கொடுப்பதற்கு முன்னெடுக்கப்பட்டு வரும் நகர்வுகள் பற்றி மேற்படி பிரதிநிதிகளிடம் ஜீவன் தொண்டமான்விளக்கமளித்தார். அத்துடன், இது விடயத்தில் உள்ள சவால்கள் பற்றியும் எடுத்துரைத்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள சர்வதேச தொழிலாளர் சம்மேளனபிரதிநிதிகள், தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என அறிவிறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், பெருந்தோட்டத் தொழிலாளர்களின் தொழில் உரிமைகள் மற்றும் தொழில் பாதுகாப்பு தொடர்பில் தாம் கூடுதல் கரிசனை கொண்டுள்ளதாகவும் சர்வதேச பிரதிநிதிகள் அமைச்சரிடம் குறிப்பிட்டுள்ளனர். அதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும் கூறியுள்ளனர்.

மேற்படிசந்திப்பில்அமைச்சர்ஜீவன்தொண்டமான் தலைமையில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதான சட்ட ஆலோசகர் கா.மாரிமுத்து, உப தலைவரும், பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி, உப தலைவரும், சிரேஷ்ட இயக்குநர் - தொழில் உறவு அதிகாரியுமான எஸ்.ராஜமணி ஆகிய இ.தொ.கா பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். திருமதி.பிரமோ, திரு.தசுன் கொடிதுவக்கு ஆகியோர் சர்வதேச தொழிலாளர் சம்மேளனத்தின் சார்பில் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

# குறிகாட்டுவானில் ஆரோக்கிய உணவகம்



குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியில்ஆரோக்கியஉணவகம்நேற்று மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால்சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

உள்ளூர்உற்பத்திகளை ஊக்குவிக்கும் முகமாகவும்தொழில்வாய்பற்றவர்களுக்குத் தொழில் வாய்ப்பகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாகவும் வேலணை பிரதேச சமுர்த்தி அபிவிருத்திம'திணைக்களமும்பிரதேசசெயலகமும் இணைந்து இந்த ஆரோக்கிய உணவகத்தை நடத்தவுள்ளன.

புங்குடுதீவு - குறிகாட்டுவான் இறங்குதுறை அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஆரோக்கிய உணவகத்தின் ஊடாகப் பாரம்பரிய மற்றம் இயற்கையான உணவுகள் குறைந்த விலையில் மக்களிற்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. சுற்றுலாத் துறையை மேம்படுத்தம் நோக்குடனும் குறித்த பகுதியில் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.






# தமிழர்களின் அபிலாசைகளை முன்னிலைப்படுத்தி ஜனநாயக பலத்தின் திரட்சி வெளிப்படவில்லையாம்

## சபா குதாஸின் விளக்கம் இது

போர் மௌனிப்பின் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மக்களின்அடிப்படைஅபிலாசைகளை முன் நிறுத்தி ஒரு திரட்சியான ஜனநாயகப் பலம் 15 ஆண்டுகளை கடந்தும் வெளிப்படுத்தப்படவில்லை இதற்கான சரியான தேர்தல் களம் என்றால் அது ஜனாதிபதித் தேர்தல் மட்டும் தான் என ரெலோவின் தலைமைக்குழு உறுப்பினர் சபா குகதாஸ் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஏனையதேர்தல்களில்திரட்சியான முடிவை வெளிப்படுத்துவது தற்போதைய நிலையில் மிக இலகுவான விடயம் இல்லை.

கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தல்களில் பல்வேறு முடிவுகளை எடுத்தாலும் அவை இன ரீதியாக சாதகமான அமையவில்லை ஆனால் யுத்தத்தின் பின்னரான சூழலில் ஒற்றுமையாக ஜனநாயகப் பலத்தை வெளிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்இதனைநடைமுறைப்படுத்த தமிழர்தாயகத்தில்அனைத்துஅரசியல் கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் ஒரேதளத்தில்ஒன்றிணையவேண்டும் ஒரே முடிவை உறுதியாக எடுக்க வேண்டும்.

தமிழர்கள் எடுக்கும் முடிவுகளை பேரினவாதம் இனவாதமாக மாற்றிவிடும்என்கிறவிமர்சனங்களைத் தாண்டிதந்திரோபாயமாக ஜனநாயகப் பலத்தை உறுதி செய்ய செயல் திறன்களை வடிவமைக்கவேண்டும்.

கடந்த காலங்களில் தமிழர்கள் எவ்வகையான முடிவுகளை எடுத்தாலும்தென்னிலங்கைஅதனைஇனவாதமாகவே மாற்றியது உதாரணமாக சமஷ்டி கேட்டாலும் பிரிவினைவாதம் பதின்மூன்றை கேட்டாலும் பிரிவினை வாதம் என்றது. எனவே இதனைத் தாண்டி இனத்தின் அபிலாசைகளை முன்நிறுத்திஒற்றுமையாகமுடிவுகளை எடுப்பது அவ்வாறான ஜனநாயகப் பலத்தைசர்வதேசஅரங்கிலும்பூகோள பிராந்தியநாடுகளின்உரையாடலிலும் தமிழ்மக்களின்அரசியல்விடுதலைக்கு சாதகமாகப் பயன்படுத்த எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை எதிர் கொள்ள மாறுபட்ட கருத்துக்களை தாண்டி ஒன்றினைவோம் - என்றுள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.04.2024இல் வெளியிடப்பெற்றது